**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.322** **நாள் : 14.10.2025**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க. நகர் மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளையும் விக்டோரியா பொது அரங்கம் புனரமைப்புப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளையும், ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள விக்டோரியா பொது அரங்கம் புனரமைப்பு பணிகளையும் 13.10.2025 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-74, சந்திரயோகி சமாதி சாலையில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூபாய் 21.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம் கட்டடப் பணியினை பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், கிருஷ்ணதாஸ் பிரதான சாலையில் அரசு பேருந்து பணிமனை முன் பகுதியில் மழை நீர் தேங்கும் பகுதியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அப்பகுதியில் மழைநீர் தேங்காத வகையில் மழை நீர் கட்டமைப்பினை ஏற்படுத்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு 73, சோமசுந்தரம் நகர் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புப் பகுதிக்கான திறந்தவெளி நிலத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அந்த நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மக்கள் பயன்பெறும் வகையில் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வார்டு-76, படவேட்டம்மன் கோயில் தெருவில் ரூ.5.13 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டடம், செல்லப்பா தெருவில் ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் பணி, வார்டு-78ல் தானா தெருவில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் சென்னை நடுநிலைப்பள்ளி

கட்டடம் மற்றும் வி.வி.கோவில் தெருவில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் ஆகிய பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள விக்டோரியா பொது அரங்கத்தில் ரூ.32.62 கோடி மதிப்பில் தொன்மை மாறாமல் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையர் (பணிகள்) திரு. வி. சிவ கிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். தமிழ்செல்வி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**